# உங்கள் மின்னஞ்சலை பாதுகாப்பது எப்படி?



## மின்னஞ்சல் (email) என்றால் என்ன?

இலத்திரனியல் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் எனப்படுவது அனுப்புநரிற்கும் ஒன்று அல்லது பல பெறுநரிற்கும் இடையே தகவல் பரிமாற்றத்துக்கு பாவிக்கப்படும் ஒரு தொழிநுட்பமாகும். மின்னஞ்சல் அனுப்புவதற்கும் பெறுவதற்கும் முதல் விடயமாக உங்களிடம் ஒரு மின்னஞ்சல் முகவரி இருத்தல் அவசியமாகும். தற்பொழுது பல மின்னஞ்சல் சேவை வழங்குனர்களிடமிருந்து மின்னஞ்சல் அனுப்புவதற்கும் பெறுவதற்குமான சேவையை பெற முடியும்.

உதாரணம்:
1. Yahoo
2. Google
3. Hotmail, etc.

## மின்னஞ்சல் பாதுகாப்பு

இன்றைய நவீன உலகில் மின்னஞ்சல் பாதுகாப்பு என்பது தகவல் தொழிநுட்பத் துறையின் மிக முக்கியமான பகுதிகளில் ஒன்றாகும். ஏனெனில் மின்னஞ்சல் அநேகமான இணைய தாக்குதல்கள் மற்றும் சுரண்டல்களுக்கு ஆளாகியுள்ளது. சமீபத்திய கணக்கெடுப்புகளின்படி வணிக ரீதியான தொடர்பாடலுக்கு மின்னஞ்சலானது தொலைபேசியை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றது. இதனால் அநேகமான வணிக நிறுவனங்களும் மற்றும் பொது மக்களும் மின்னஞ்சல் பாதுகாப்பு பற்றி அக்கறை கொள்வதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## மின்னஞ்சல் பாதுகாப்பிற்கான அச்சுறுத்தல்கள்

***1) வைரஸ்கள் - நச்சு நிரல்கள் (Viruses )***

வைரஸ்கள் தகவல்களை அழிக்கவும் முழு மின்னஞ்சல் சிஸ்டமை வீழ்த்தவும் திறன் கொண்டவையாகும்.

***2) ஸ்பாம் (Spam)***

ஸ்பாம் பெரியளவு கொள்ளளவை கொள்ள கூடியது. அதனால் அது தளத்தின் ஸ்திரத்தன்மையை நேரடியாக பாதிக்கிறது. அத்துடன் அது வைரஸ்களையும் கொண்டிருக்க கூடும். இவற்றின் காரணமாக இது ஒரு மின்னஞ்சல் பாதுகாப்பு அச்சுறத்தலாக கருதப்படுகிறது.

***3) பிஷ்ஷிங் (Phishing)***

பிஷ்ஷிங் ஆனது அடையாள திருட்டாக கருதப்படுவதோடு, இது நிதி நிறுவனங்கள் மற்றும் இணைய விற்பனையாளர்களை இலக்காக கொண்டுள்ளது. பிஷ்ஷிங் செயற்பாட்டினூடாக ஸ்பாம் நுட்பங்களை பயன்படுத்தி மின்னஞ்சல் வாயிலாக பெருமளவிலான தந்திரங்கள் செய்து பயனாளர்களது கடன் அட்டை எண்கள் மற்றும் கடவுச்சொற்களை திருடுகிறது.

## மின்னஞ்சல் அச்சுறுத்தல்களுக்கு எதிராக செயற்படப் பொதுவான வழிகள்

- **உங்கள் மின்னஞ்சல் மென்பொருளை அல்லது இணையத்தளத்தினைத் திறப்பதற்கு முன்,** வைரஸ் அழிப்பான் *(virus guard)* இன்றைய திகதி வரை புதுப்பிக்கப்பட்டுள்ளதா என்று சரி பார்க்கவும்.
- **புதிய மின்னஞ்சல் வந்தவுடன்,**
  அனுப்புநருடைய நம்பகத்தன்மையை உறுதி செய்யவும்
  - **உங்களால் நம்பகத்தன்மையை உறுதி செய்ய முடியாவிட்டால் மின்னஞ்சலை நிராகரியுங்கள்.**

  மின்னஞ்சலது *subject, body* மற்றும் *attachment* என்பவற்றின் நம்பகத்தன்மையை உறுதி செய்யவும்.
  - **உங்களால் நம்பகத்தன்மையை உறுதி செய்ய முடியாவிட்டால் மின்னஞ்சலை நிராகரியுங்கள்.**

## முக்கிய குறிப்பு:

- **தெரியாத மூலத்தில் இருந்து ஒரு மின்னஞ்சல் பெறப்பட்டால்,**
    - மின்னஞ்சலிலுள்ள எந்த இணைப்புகளையும்(links) கிளிக் செய்ய வேண்டாம்.
    - தொடுப்புக்கள்(attachment) எதனையும் பதிவிறக்க வேண்டாம்.
    - யாருக்கும் அதை forward செய்ய வேண்டாம்
    - உங்கள் தனிப்பட்ட விவரங்களை சமர்ப்பிக்க வேண்டாம்

## பாதுகாப்பான முறையில் மின்னஞ்சல் கடவுச் சொல்லொன்றை கட்டமைப்பது எப்படி?

- மின்னஞ்சல் கடவுச்சொல்லின் சிக்கல் தன்மையைக்(complexity) கூட்டவும். பின்வருமாறு பாதுகாப்பான கடவுச் சொல்லொன்றைக் கட்டமைக்க முடியும்.

**உதாரணம் 1:**
எளிதாக நினைவில் நிற்கக்கூடிய ஒரு கடவுச்சொல்லை உருவாக்க கூடிய சிறந்த வழி மூன்று சிறிய வார்த்தைகள் இணைப்பதாகும். உதாரணமாக, 'ballbatwicket', 'tomjerrymicky' போன்றன. கடவுச்சொல்லிற்கு மேலும் பாதுகாப்பு சேர்க்க ஒவ்வொரு சொல்லினதும் முதல் எழுத்துக்களை "Capitalize" பண்ணலாம். உ+ம் : 'BallBatWicket'. பின்னர் நாம் கடவுச்சொல்லின் ஏதாவது ஒரு பகுதியில் ஒரு எண்ணை சேர்க்க முடியும். அது உங்களுக்குப் பிடித்த எண் அல்லது நீங்கள் எளிதாக நினைவில் வைக்க கூடிய ஏதாவது ஓர் எண்ணாக இருக்கலாம். நாம் குறியீடுகளையும் சேர்க்க முடியும். உங்களுக்கு பழக்கமான ஏதாவது ஒரு குறியீடை சேர்த்து கொள்ள முடியும். நாம் இப்போது இவ்வாறனதொரு பாதுகாப்பான கடவுசொல்லை உருவாக்கி விட்டோம் :
"2BatBallWicket# ".

**உதாரணம் 2:**
"My School at Moratuwa" என்பதை இவ்வாறு உருவாக்கலாம் : "mi$c#MT".

## மின்னஞ்சல் ஊடாக ஏற்படக்கூடிய பாதுகாப்பு அச்சுறுத்தல்கள்:

- **சந்தர்ப்பம் 1:**
  Andrew என்பவர் வெளிநாட்டு வாடிக்கையாளர்களை கையாளும் ஒரு தொழிலதிபர் ஆவார். பெரும்பாலான நேரம் அவர் உலகம் முழுவதும் பயணம் செய்து கொண்டிருப்பார். இன்று காலை Andrew வின் நண்பர்களில் ஒருவரான James பின்வரும் மின்னஞ்சலை பெற்றார்.

  From: Andrew@mail.com
  To: James@tmail.com
  Subject: " James எனக்கு ஒரு பெரிய உதவி வேண்டும்"

  அன்புள்ள James,
  நான் தற்போது ஜெர்மனியில் இருக்கின்றேன். இப்போது நான் ஒரு பெரிய பிரச்சினையில் சிக்கியுள்ளேன். நேற்றிரவு எனது பணப்பையை தொலைத்து விட்டேன். அத்துடன் நான் எனது அனைத்து கடனட்டைகள் மற்றும் பணத்தை இழந்து விட்டேன். இத்துடன் நான் இப்பொழுது வசிக்கின்ற ஹோட்டல் மேலாளருடைய கணக்கு விவரங்களை அனுப்புகிறேன். நான் திரும்பி வரும் போது உனது பணத்தை கொடுக்கிறேன். நான் சில நிமிடங்கள் முன்பு எனது அனைத்து கடனட்டைகளையும் நிறுத்தி விட்டேன். எனக்கு உனது இந்த உதவி மிகப்பெரியதாக இருக்கும்.

பெயர்: Micheal Thomas
கணக்கு இலக்கம்: 100938883980
வங்கி: Barclays Bank

இப்படிக்கு,
Andrew.

இது போன்ற ஒரு மின்னஞ்சலை பெற்ற பிறகு என்ன செய்ய வேண்டும் -

- இந்த மின்னஞ்சலுக்கு பதில் அனுப்ப வேண்டாம்
- உங்கள் தனிப்பட்ட விவரங்களை அனுப்ப வேண்டாம்
- குறிப்பிட்ட கணக்கிற்கு எந்த பணம் பரிமாற்றத்தையும் செய்ய வேண்டாம்.
- இந்த விடயம் பற்றி TechCERT இற்கு தகவல் தெரிவிக்கவும்.

- **சந்தர்ப்பம் 2:**

நேற்றிரவு "Manel" பின்வரும் மின்னஞ்சலை பெற்றார்.

From: Mailinglistadmin@Dmail.com
To: Manel1234@Dmail.com
Subject: கடவுச்சொல் சரிபார்ப்பு

அன்புள்ள Manel,
நீங்கள் நன்றாக இருக்கிறீர்கள் என நம்புகிறேன்.
Dmail, system upgrade இன் காரணமாக தங்களுடைய அனைத்து பயனர்களது கடவுச்சொல்லை சரிபார்க்கும் செயல்முறையில் உள்ளது. உங்களது தற்போதைய கடவுச்சொல்லை சமர்ப்பித்து இந்த மின்னஞ்சலுக்கு பதில் தெரிவிக்கவும். உங்களது விரைவான பதில் மின்னஞ்சல் விரும்பத்தக்கது.

இப்படிக்கு,
Dmail Team.

இது போன்ற ஒரு மின்னஞ்சலை பெற்ற பிறகு என்ன செய்ய வேண்டும் -

- **இந்த மின்னஞ்சலுக்கு பதில் அனுப்ப வேண்டாம்**
- **யாருக்கும் இதை forward செய்ய வேண்டாம்**
- **இந்த விடயம் பற்றி Dmail இற்கு தகவல் தெரிவிக்கவும்**
- **இந்த விடயம் பற்றி TechCERT இற்கு தகவல் தெரிவிக்கவும்.**

- **சந்தர்ப்பம் 3:**

பிலிப்(Phillip) ஒரு மருத்துவர். அவர் தனது வங்கி தேவைகளுக்காக "Megabank" வங்கியை பயன்படுத்துகிறார். இன்று காலை அவர் பின்வரும் மின்னஞ்சலை பெற்றார்.

From:MegaBankonline@magabank.com
To: Philip123@smail.com
Subject: New Internet Banking Features

அன்புள்ள வாடிக்கையாளருக்கு,

"Mega Bank" எப்பொழுதும் தனது வாடிக்கையாளர்களுக்கு அதிக சேவைகளை வழங்கி அவர்களது தொழில் துறையில் ஊக்குவிக்க முயற்சித்து கொண்டே இருக்கிறது. "Mega Bank" இனுடைய இணைய வங்கி முறைமை இணைய வங்கி திறனை அதிகரிக்க இப்போது அதிக அம்சங்களை கொண்டுள்ளது. பின்வரும் இணைப்பை கிளிக் செய்து வித்தியாசத்தை உணர்ந்து கொள்ளவும்.

http://www.megabanknewonline.com/login.php

இப்படிக்கு,
Mega Bank Team.

இது போன்ற ஒரு மின்னஞ்சலை பெற்ற பிறகு என்ன செய்ய வேண்டும் -

- **இந்த மின்னஞ்சலுக்கு பதில் அனுப்ப வேண்டாம்**
- **யாருக்கும் இதை forward செய்ய வேண்டாம்**
- **இந்த விடயம் பற்றி "Mega Bank" இற்கு தெரியப்படுத்தவும்**
- **இந்த விடயம் பற்றி TechCERT இற்கு தகவல் தெரிவிக்கவும்.**

If you have any questions, please inform us:


https://techcert.lk/en/report-form
தொலைபேசி - +94 11 4 462 562
மின்னஞ்சல் - help@techcert.lk



This document was prepared by the Training Division of LK Domain Registry in collaboration with the Internet Society Sri Lanka Chapter.
For more details please visit http://nic.lk/index.php/training-materials.


HELPING YOU SECURE YOUR INFORMATION ASSETS